செ.வெ.எண். 21/அக்டோபர் தேதி : 13.10.2016

## தருமபுரி மாவட்டம்

## சர்வதேச பேரிடர் குறைப்பு தின பேரணியை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் துவங்கி வைத்தார்.



தருமபுரி அரசு கலைக்கல்லூரியில் சர்வதேச பேரிடர் குறைப்பு தின பேரணியை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (13.10.2016) கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :-

இன்று சர்வதேச பேரிடர் குறைப்பு தின பேரணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்களாகிய நீங்கள் வசிக்கும் பகுதி வெள்ளத்திற்கு உட்படும் தன்மை கொண்டதா என்பதை கண்டறியுங்கள். உங்கள் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் பாதுகாப்பான பகுதிக்கு செல்லும் பாதையைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். உங்கள் பகுதி வெள்ளத்திற்கு உள்ளாகக்கூடிய பகுதியாய் இருந்தால் வீடு கட்ட மாற்றுப் பொருட்களைப் பயன்படுத்துங்கள். எடுத்து செல்லத்தக்க வானொலிப்பெட்டி, டார்ச் மற்றும் உதிரி பேட்டரிகள் தயாராக வைத்திருக்கவும். முதலுதவிப்பெட்டி மற்றும் குடிநீர், உலர் உணவு வகைகள், உப்பு, சர்க்கரை ஆகியவற்றைச் சேமித்து வையுங்கள். மண்ணெண்ணெய், மெழுகுவர்த்தி, தீப்பெட்டி மற்றும் துணிகளையும், மதிப்புள்ள பொருட்களையும் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள, நீர்புகாத பைகளைப் பயன்படுத்தலாம்.

அவசர காலத்திற்காக நீர்புகாத பையில் எடுத்து செல்ல வெதுவெதுப்பான ஆடைகள், அடிப்படை மருந்துகள், விலையுயர்ந்த பொருட்கள், படுக்கைகள் ஆகியவற்றை தயார் நிலையில் வைத்திருக்கவும், நீங்கள் வெளியேற நேர்ந்தால் சென்றடையும் முகவரியை, உள்ளூர் அதிகாரிகளுக்குத் தெரிவியுங்கள். மரச்சாமான்கள், துணிமணிகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களை, அலமாரிகள் போன்ற உயரமான இடங்களில் வைக்கவும். மின்சாரம் மற்றும் சமையல் எரிவாயு இணைப்பினைத் துண்டிக்கவும். வெளியேறினாலும், வீட்டில் தங்கியிருந்தாலும் கழிப்பிட துளை மீதும், குளியலறை/துணி துவைக்கும் அறையின் கழிவு நீர் வெளியேறும் துளை மீதும் மணல் மூட்டைகளை வையுங்கள். இதன் மூலம் கழிவு நீர் மீண்டும் உள்புதலைத் தடுக்க இயலும்.

வெள்ளத்தின் போது கொதிக்க வைத்த நீரை அருந்துகள். பால் கலக்காத தேநீர், அரிசி கஞ்சி, இளநீர் போன்றவற்றை அருந்துங்கள். உணவை மூடி வைத்திருக்கவும், வயிற்றுபோக்கு இருந்தால் அதிக உணவை உட்கொள்ளாதீர்கள். அங்கன்வாடி ஊழியர்களைத் தொடர்பு கொண்டு, சர்க்கரை உப்புக் கரைசலை உட்கொள்ளுங்கள். உள்ளூர் அதிகாரிகளுக்கும் / தன்னார்வலர்களுக்கும் எல்லா வகையிலும் உதவுங்கள்.

தருமபுரி மாவட்டத்தில் 251 ஊராட்சிகளிலும் கிராம அளவிலான பேரிடர் மேலாண்மை குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் கிராம நிர்வாக அலுவலர், பஞ்சாயத்து செயலாளர்கள், சுய உதவிக்குழுவினர், சுகாதார செவிலியோர் ஆகியோர் உள்ளனர். இக்குழுவினர் அந்தந்த கிராமங்களில் பேரிடர் மேலாண்மை காலங்களில் எவ்வாறு

இடர்பாடுகளை களைவது தொடர்பான கூட்டங்கள் நடத்தப்படுகின்றன என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இப்பேரணியானது அரசு கலைக்கல்லூரியில் தொடங்கி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நிறைவுற்றது. இப்பேரணியில் மகளிர் சுய உதவிக்குழுவினர் மற்றும் கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தினர் சுமார் 200-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இப்பேரணியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர், கோட்டாட்சியர் திரு. இராமமூர்த்தி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. மீ. செல்வகுமார், தனி வட்டாட்சியர் (பேரிடர் மேலாண்மை) திருமதி. கோப்பெருந்தேவி, வட்டாட்சியர் திரு. சரவணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.